விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் 52 வைகாசி • 2002 பக்கங்கள் 12 ஒளி 59

# தமிழீழதேசியசொத்துக்களானபனை,தென்னை வளங்களை அழித்தொழிப்பதைஉடன்நிறுத்துக!

## யாழ்.மாவட்டக்கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனகசபாபதி கோரிக்கை

தமிழீழத்தின் தேசிய சொத்தாக விளங்குவது பனை தென்னை வளங்களாகும். "கற்பகதரு" தெய்வீக தாவரம், பஞ்சம் போக்கி என்று பல்வேறு பெயர்களினால் அழைக்கப்பட்டு வரும் பனை மரத்தினை கண்மூடித்தனமான முறையில் அழித்தொழிப்பதை தமிழ்மக்களுடன் சேர்ந்து கூட்டுறவாளர்களாகிய நாமும் வன்மையாகக் கண்டிப்பதுடன் இவற்றைத் தறிப்பதை உடன் நிறுத்துமாறு கோருகின்றோம்.

கடந்த பலவருடங்களாக பனை மரங்களையும், தென்னைமரங்களையும் தமது இராணுவ நடவடிக்கைகளுக்காக தறித்தொடுக்கப்பட்டுவருவதை கண்டித்து யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி மேற்கண்டவாறு அறிக்கை மூலம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழத்தில் சுமார் ஒரு கோடியே பத்துலட்சம் பனை மரங்கள் இருப்பதாகப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இப்புள்ளி விபரங்களின்படி மூன்றுலட்சத்து ஐம்பதினாயிரம் பனைமரங்கள் யாழ் குடாவில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற சுமார் 50 ஆயிரம் குடும்பங்கள் தமது அன்றாட ஜீவனோபாயத்துக்கு பனை, தென்னை வளத்தையே நம்பியிருக்கிறார்கள்;

இவர்களில் சுமார் 85 ஆயிரம் குடும்பங்கள் பனை, தென்னைவளம் சார்ந்த கூட்டுறவு சங்கங்களில் உறுப்புரிமை பெற்று இவ்வளங்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் தங்கி வாழ்கிறார்கள்,

கடந்த இரண்டு தசாப்த காலங்களுக்கு மேலாக வடகிழக்கில் இடம்பெற்று வரும் யுத்த அனர்த்தங்களி

(12-ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் உணவுத்திணைக்களத்துக்கு செல்மதியாகவுள்ள லட்சக்கணக்கான ரூபாக்களை கழித்து எழுதுமாறு கோரி யாழ். மா.கூ. சபை நடவடிக்கை

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின்கீழ் இயங்கி வந்த உணவுத்திணைக்களத்திற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள் கொடுமதியாகவுள்ள பலலட்சக்கணக்கான ரூபாய்களைக் கழித்தெழுதுவதற்கு யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கைஎடுத்து வருவதாக யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. பி. கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

யாழ். செயலகத்தில் இயங்கி வந்த உணவுத்திணைக்களம் யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்கி வந்தது நாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் பலலட்சக்கணக்கான ரூபாய்களை சங்கங்கள் இழந்ததினால் உணவுத்திணைக்களத்திற்கு வழங்க வேண்டிய கடனை வழங்க முடியாத நிலையில் இருந்தன,

இந்நிலையில் உணவுத்திணைக்களத்திற்குசங்கங்கள் செலுத்தவேண்டிய கடன்தொகையைக்கழித்தெழுதுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும். யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மேற்கொண்டுள்ளது.

### உள்ளே....


- கூட்டுறவும் சனசமூக அபிவிருத்தி
- பொது அறிவு
- மூகாமைத்துவத்தில்ஊழியரிடலின்
- பப்பாசியைப் பாதிக்கும் வைரசு
- சமூக அபிவிருத்தியும் கூட்டுறவும்
- மெல்லக் கொல்லும் மென் பானங்கள்

# கூட்டுறவும் சன சமூக அபிவிருத்தியும்

கூட்டுறவு இயக்கத்தின் தோற்றத்தின் போதிருந்த சமூக பொருளாதார நிலைமைகள் காலப்போக்கில் மாற்றமடைந்து வந்திருப்பதைக் காணலாம். கூட்டுறவு இயக்கம் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு நோக்கங்களுக்காகவும் மக்களால் உருவாக்கப்பட்டு இயங்கிவந்தாலும் இவற்றை நிறுவன ரீதியாக ஒருங்கிணைக்கக் கூடிய அமைப்பின் முக்கியத்துவத்தை சர்வதேச கூட்டுறவாளர்கள் உணர்ந்த சர்வதேச கூட்டுறவு நிறுவனம் 1895ல் உருவாக்கப்பட்டது.

கூட்டுறவு இயக்கம் கூட்டுறவு கொள்கைகளுக்கமைய இயங்கும் போதுதான் அதன் தனித்தன்மை பேணக்கூடியதாகவும் பொருளாதார முறைமையானதாக மிளிரக் கூடிய தன்மையுடையதாகும் நிலை ஏற்படும் என்பது உணரப்பட்டது. இதனடிப்படையில் சர்வதேச கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தினால் 1937, 1966, 1995 ஆகிய காலப் பகுதியில் கூட்டுறவுக் கொள்கைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. கூட்டுறவுக் கொள்கைகளில் ''சமூக மேம்பாடு'' என்ற கொள்கை 1995ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவ்வளவு கால ஓட்டத்தின் பின்னே இக்கொள்கையின் முக்கியத்துவத்தினை சர்வதேச கூட்டுறவாளர்கள் உணர்ந்துள்ளார்கள் என்பதனையே இதன் மூலம் உணரக் கூடியதாக உள்ளது.

கூட்டுறவு இயக்கத்தின் செயற்பாடு மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது. மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை முறைபற்றியும், அம்மக்களிடத்தில் செயற்றிட்டத்தின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய நிலையையும் இம் மாற்றம் திட்டமிட்ட அடிப்படையில் எவ்வளவுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை மதிப்பீடு மூலம் அளவிடக் கூடிய நிலையையும் ஏற்படுத்துவதில் ஏற்பட்ட குறைபாடே கூட்டுறவின் எதிர்பார்த்த நோக்கத்தை அடைய முடியாமைக்கு காரணம் என்பதை கூட்டுறவாளர்கள் உணர்ந்துள்ள தன் வெளிப்பாடே சமூக மேம்பாட்டுக் கொள்கை வெளியீடாகும் என்று கூறினால் மிகையாகாது.

இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்களில் 1911ம் ஆண்டு தொடக்கம் வரலாற்று ரீதியாக ஆணைக்குழுக்களின் மூலம் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை கூட்டுறவு இயக்கத்தில் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை கூட்டுறவு இயக்கத்தில் மறுசீரமைப்பு ஏன் மேற்கொள்ளப்படுகின்றன என்பது பற்றி ஆராயவேண்டும். 2001ம் ஆண்டிலும் கூட்டுறவுகள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இலங்கை கூட்டுறவு இயக்கத்தின் மறுசீரமைப்புக்கள் எதிர்பார்த்த இலக்கை அடையாததும் இதற்கு காரணமாகலாம். எவ்வாறாயினும் கூட்டுறவு இயக்கம் இலங்கை நோக்கிய பயணத்தில் உலக பொருளாதார சமூக மாற்றத்திற்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் செயல்திட்டங்கள் அமைய வேண்டியது முக்கியமானது. இலங்கை கூட்டுறவு இயக்க செயற்பாடுகள், கட்டுப்பாடான சட்டங்கள் ஆகிய இரு துருவங்களுக்கிடையில் செயற்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. இது சுயமான வளர்ச்சிக்கு எதிர் நோக்கும் துர்ப்பாக்கியமான ஒரு நிலைமை என்றே கூறலாம்.

ஞா. கேதீஸ்வரன்
விரிவுரையாளர், கூட். பயிற்சி
நிறுவனம், வவுனியா.

இலங்கையில் கூட்டுறவு சங்கங்களில் மக்கள் எந்தளவுக்கு பங்களிக்கின்றார்கள்? மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு கூட்டுறவு இயக்கம் எந்தளவுக்கு செயற்பட்டுள்ளது? என்பதை கூட்டுறவாளர்கள் ஒப்பீடு செய்து பார்க்க வேண்டும். இத்தகைய நிலைமை காணப்படாதிருப்பது குறைபாடாகவே குறிப்பிடலாம். இதனை சமூக ஆய்வின் மூலம் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தும் கூட்டுறவுச் சங்கங்கள் இதில் ஆர்வமில்லாமலே உள்ளன.

இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலான மக்கள் ஈடுபாடு கொள்ளாத நிலையே உள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் பொருளாதார நோக்கத்தை மட்டும் கொண்டிராது சனசமூக அபிவிருத்தியிலும் ஈடுபட வேண்டும். மக்களை கூட்டுறவில் இணையக் கூடியவகையில் செயல்திட்டங்களை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதே கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் சவாலாக உள்ளது. இதன் வெற்றியானது தற்போதைய கூட்டுறவு நிலைமையை மாற்றும் காரணியாக அமையும். இத்தகைய நிலை சமூக அபிவிருத்தியில் கூட்டுறவுச் சங்கங்களின் ஈடுபாட்டின் தன்மையிலேயே தங்கியுள்ளது என்பது வெளிப்படை. இதற்கு கூட்டுறவாளர்களுக்கும், பணியாளர்களுக்கும், சமூகவியல், சமூகப்பணி பற்றிய சிறந்த அறிவு பெற்றிருப்பது அவசியமானதாகும். பல்வேறு துறைகளில் இதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. கூட்டுறவில் இது உணராத தன்மையே காணப்படுகிறது. இவர்கள் இவ் அறிவினை பெற்றிருப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. கூட்டுறவுக் கல்வி மூலம் இவ் அறிவினை புகட்டக் கூடிய ஏற்பாட்டினை கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டியது முக்கியமானதாகும்.

சமூகவியல் சமூக உறவுகளை விரிவாக ஆராய்கின்றது. சமூக உறவுகள் ஏற்படுகின்ற நிலைமைகள், அவற்றை கட்டுப்படுத்தும் நெறிகள், அவற்றிலிருந்து முகிழ்க்கும் குழுக்கள், அமைப்பு முறைகள், செயற்பாங்குகள், அவற்றின் விளைவாக ஏற்படும் நிகழ்வுகள் போன்றவற்றை சமூகவியல் ஆராய்கின்றது. ''மொறிஸ் கின்ஸ் பேர்க்'' (Morris king burg) என்ற சமூகவியலாளர் ''சமூகம் என்பது மனித உறவுகள் பின்னிப்பிணைந்து இருக்கும் இழையம்'' என்று குறிப்பிடுகின்றார். இவை யாவும் கூட்டுறவு இயக்கத்தில் காணப்படுகின்றன, ஆனால் ஒப்பீட்டு ரீதியாக உணரப்படாத நிலையே காணப்படுகிறது. சமூக உறவுகளை கூர்ந்து கவனித்தால் அவை எந்தெந்த நிலைகளுள் என்னென்ன வடிவங்களை அடைகின்றன என்பதைக் கண்டு கொள்ளலாம். அந்த வடிவங்களை [illegible] கண்டு அவற்றைப் பிரித்து வகைப்படுத்தி அலசி ஆராய்ந்து விளக்கி கூறுவதையே சமூகவியல் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனையே சமூகவியலாளர் ''சிம்மல்'' அவர்களும் வலியுறுத்திக் கூறியுள்ளார். இத்தகைய முறையை கூட்டுறவில் பயன்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கும் இலக்கை அடையக் கூடியதாக இருக்கும். கூட்டுறவு வளர்ச்சி அடைந்தே வந்துள்ளது ஆனால் அதன் வளர்ச்சிப் போக்கு எவ்வாறு அமைந்துள்ளது என்பதே நோக்க வேண்டியதாகும்.

(12ம் பக்கம் பார்க்க)

# பொது அறிவு - GENERAL KNOWLEDGE

- இன்ரநெத் (Internet) அல்லது இணையம் என்பது பல்வேறு கணனி வலைப்பின்னல் அமைப்புகள் ஒன்றிணைக்கப்பட்டு தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளும் அமைப்பே இதுவாகும். இலங்கையில் இன்ரனெற் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு 1996ம் ஆண்டு.
- 2002ம் ஆண்டு உலகக்கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டி சீனா, தென் கோரியாவில் நடைபெறவுள்ளது.
- உலகம் முழுவதும் கண்ணி வெடிகளைத் தடை செய்ய வேண்டும் எனப் பிரச்சாரம் செய்த " ஜெடி வில்லியம் " 1997ல் நோபல் பரிசு பெற்றார்
- அணுவைப் பிளக்க உதவும் கருவியின் பெயர் - ''சைக்ளோட்ரான்''
- உலகவங்கியின் தற்போதைய தலைவர் " ஜேம்ஸ் வூம்ஸ் பேக்கர் "
- முதன் முதல் கொம்பியூட்டரின் பெயர் - " ஈனியா "
- 1999ல் பொது நலவாய அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட நாடு - பாகிஸ்தான்
- உலகிலேயே அதிக வயதான அதாவது 114 வயதுடைய "ஈவா மொறிஸ்" எனும் பெண்மணி 2000 நவம்பர் 2ம் திகதி காலமானார்
- 2000 ஒக்டோபர் 27ம் திகதி ஒரு நாள் சர்வதேச போட்டியில், நடைபெற்ற பந்து வீச்சில் முரளிதரன் 30 ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டை கைப்பற்றி உலகசாதனை படைத்துள்ளார்
- எயிடஸ் நோயினை ஏற்படுத்தும் வைரஸ் H I V (Human Immuno Deficiency Virus) வைரஸ் ஆகும்
- இலங்கையின் நாணய மாற்று வீதத்தை தீர்மானிக்கும் செயற்பாட்டிலிருந்து மத்திய வங்கி 23 - 01 - 2001 முதல் விலகி நாணய மாற்று வீதம் தளம்பவிடப்பட்டது
- இலங்கையின் முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தை 10-11-1999ல் பிறந்தது
- கணனியில் பிரயோகிக்கப்படும் Basic என்பதன் விரிவாக்கம் Beginner's All pn rpose Symbolic Instruction Code ஆகும்
- அண்மையில் சுதந்திர நாடாக மலர்ந்துள்ள நாடு "கிழக்குத்திமோர்" நாடாகும் இதன் ஜனாதிபதி "சனானா குஷ்மோவை" ஆவர்
- இலத்திரனியல் வர்த்தக (E - Commerce) நிறுவனங்கள் விற்பனைப் பொருட்களின் விபரத்தை இணையத்தில் அட்டவணைப் படுத்தி இருக்கும் பொருட்கள் தேவைப் படுவோர் இருந்த இடத்திலிருந்து கட்டளையிட்டு பணத்தை செலுத்தி பெறலாம்
- E - money என்பது கொடுப்பனவுகள் மூலமாக இருந்தஇடத்தில் இருந்தவாறோ தமது வங்கிக்கணக்கு மூலம் மாற்றீடு செய்யப்படும் முறையாகும். இதற்கு Smart Card பயன்படுத்தப்படும்

தொகுப்பு:- வே. மணிமாறன்

## துளசியின் மருத்துவபயன்பாடு

துளசிச்செடியை அறியாதவர்கள் எவரும் இல்லை, துளசி கருந்துளசி, சாதாரண துளசி என இரு வகைப்படும். துளசி இருக்கும் இடத்தில் நோய்க்கிருமிகளோ விஷப்பாம்புகளோ கிட்ட நெருங்கமாட்டாது.

துளசி இலை பல்வேறு மருத்துவக்குணங்களைக் கொண்டதாக உள்ளது. அஜீரணம் வயிற்றுப்போக்கு ஆகியவற்றுக்கு கருந்துளசிச் சாற்றைக் கொடுத்தால் சுகம் கிடைக்கும். தேள் கொட்டியவர்கள் தேங்காயுடன் ஒரு சில துளசி இலையை சாப்பிட்டால் தேள் கொட்டிய விஷம் இறங்கும்.

சாதாரண துளசியானது ஜலதோஷம் இருமல், காது வலி போன்ற நோய்களால் கஷ்டப்படுபவர்களுக்கு கைகண்ட மருந்தாக அமைகிறது.

வாந்திபேதி பரவி வரும் காலங்களில் ஒரு கைப்பிடியளவு துளசி எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் நீர் ஊற்றி மூடி வைத்து அதன் பின் தினமும் காலையில் வெறுவயிற்றில் குடித்து வந்தால வாந்திபேதி பரவாது தடுக்கலாம்.

தலைவலி, தோல் சம்பந்தமான சகல தோல்களுக்கும், சொறி, அரிப்பு, சொர சொரப்பு, புண்போன்றவற்றிக்கும் துளசி கைகண்ட மருந்தாக உள்ளது.

சிறுநீர் சம்பந்தமான கோளாறுகளுக்கும் தீராத இருமல் போன்றவற்றுக்கும், குழந்தைப் பிள்ளைகளின் வயிற்று உபாதைகளுக்கும் துளசி சிறந்த மருந்தாகும். இரண்டு, மூன்று துளசி இலையுடன் சீரகம் சேர்த்து அரைத்து வெந்நீருடன் கொடுத்தால் வயிறு ஊதல் நீங்கிவிடும்.

# முகாமைத்துவத்தில் ஊழியரிடலின் பங்கு
# ROLE OF STAFFING IN MANAGEMENT

நிறுவனத்தின் காணப்படும் முக்கியமான வளமாகக் கருதப்படுவது மனிதவளமாகும் எனவே நிறுவனத்தின் தொழிற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்ல சிறந்த ஊழியர்கள் சேர்த்துக்கொள்ள வேண்டும். அந்தவகையில் ஊழியரிடல் என்பது "நிறுவனத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு மனிதவளத்திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தெரிவு, மதிப்பிடல், பயிற்சியளித்தல், விருத்திசெய்தல் என்பவற்றைக் கொண்ட முகாமைத்துவச் செயற்பாடேயாகும்" எந்தவொரு நிறுவனமும் ஊழியரிடலின் உதவியின்றி இயக்கப்படமுடியாது என்பதால் ஊழியரிடல் அடிப்படையில் முக்கியம் பெறுகின்றது.

### 1.1 மனிதவளத்திட்டமிடல் Humanresoureplanning ;

நிறுவனங்களின் தொழிற்பாட்டுக்கு அவசியமான ஒரு வளம் மனிதவளமாகும் இதன் காரணமாக தமது நோக்கங்களை அடைவதற்கு வசதியாக மனிதவளத்தை என்ன அளவிலும் என்ன தரத்திலும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை முடிவு செய்யும் கருமமே மனிதவளத் திட்டமிடலாகும். அதாவதுநிறுவனத்திற்கான மனிதவளத்தை எந்தளவில் பெறுறுக்கொள்வல், பயன்படுத்தல், விருத்தி செய்தல், தொடர்பு வைத்திருத்தல் என்பன பற்றிய ஒரு தந்திரோபாயமாகும்.

### 1.2 ஆட்சேர்த்தலும் தேர்ந்தெடுத்தலும் : Recruitment & Selection ;

நிறுவனத்தில் வேலைவாய்ப்பிற்கான வெற்றிடம் ஏற்படும் போது ஊழியச்சந்தைக்கு இது பற்றிய தகவலை வழங்கி, மிகச்சிறந்த தகுதியானவர்களை வேலைக்கு விண்ணப்பிக்கும்படி தூண்டுகின்ற செயற்பாடே ஆட்சேர்ப்பு எனப்படும்.

தெரிவு என்பது பதவிக்கு விண்ணப்பித்தவர்களிலிருந்து மிகப் பொருத்தமான விண்ணப்பதாரியை தெரிவு செய்வதாகும்.

நிறுவனமானது சரியான ஆட்சேர்புத் தேர்ந்தெடுத்தல் முறையினைத் திட்டமிடுவதற்கு போதிய கொள்கைகள் நடைமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு முறைகள் பின்வரும் மூன்று வழிகளில் இடம் பெறலாம் அவையாவன,

1. உள்ளிருந்து ஆட்சேர்ப்பு
2. வெளியிலிருந்து ஆட்சேர்ப்பு
3. உள்ளிலிருந்தும் வெளியிலிருந்தும் ஆட்சேர்ப்பு

உள்ளிருந்து ஆட்சேர்ப்பு என்பது நிறுவனத்தின் உள்ள வெற்றிடங்களுக்கு ஏற்கனவே நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் மத்தியில் தெரிவினை மேற்கொள்வதனைக் குறிக்கும். இது பதவி உயர்வு Promotion) இடமாற்றம் (Transfer) என்ற வடிவங்களில் இடம்பெறும்.

வெளியிலிருந்து ஆட்சேர்ப்பு என்பது நிறுவனத்தில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கு நிறுவனத்திற்கு வெளியிலிருந்து ஊழியர்களை தெரிவு செய்து நியமனம் செய்தலைக் குறிக்கும்.

---

வே. பணிமாறன்
விரிவுரையாளர்,
பிராந்திய கூட்டுறவு கல்லூரி
யாழ்ப்பாணம்.

---

நிறுவனம் பல்வேறு வழிமுறைகள் மூலம் ஆட்சேர்பபு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் அவையாவன;

விளம்பரப்படுத்தல் :

அரசவர்த்தமானி (கசற்) புதினப் பத்திரிகை, தொழில் சார்சஞ்சிகைகள் என்பவற்றில் விளம்பரம் செய்தல்

ii தொழில் முகவர் நிலையங்கள் ( Emyloyment Agencies )

iii வேலைவங்கி

iv பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக்கல்லூரிகள் அரச பயிற்சி நிறுவனங்கள்

v நிறுவனங்களின் தற்போதைய ஊழியர்கள் ஊடாக அவர்களின் சிபார்சின் மூலமும் புதியவர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது அதாவது நிறுவனத்தின் விசுவாசமான ஊழியர்கள் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட பல வழி முறைகள் மூலம் நிறுவனம் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆட்சேர்ப்பு தொடர்பான செலவு, வேலையின் தன்மை, வேலையற்றோர்விதம், வேலைக்கு ஆட்களைத் திரட்டிக் கொள்வதற்கான கால அவகாசம் என்பவற்றின் அடிப்படையில் நிறுவனம் எவ்வழிமுறையூடாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பது பற்றி தீர்மானித்துக் கொள்ளும்.

வேலைக்கான விளம்பரத்தில் குறிப்பிட்ட பதவியின் பெயர், வேலை தொடர்பான விபரம், தேவைப்படும் கல்வித்தகமை, அனுபவம், சம்பள விபரங்கள், பிறநலன்கள் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டியமுறை, முகவரி, விண்ணப்பமுடிவு திகதி என்பன தொடர்பான சகல விபரங்களும் குறிப்பிடப்படுதல் அவசியமானதாகும்.

மேலும் விண்ணப்பத்தின் மாதிரிப்படிய விளம்பரத்தின் போது பிரசுரிக்கலாம். இதன் மூலம் தேவையான தகவல்களைப் பெறலாம். அத்துடன் விண்ணப்பப் படிவங்களை பரீசிலனை செய்வதும் சுலபம்

விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளப்பட்டதை தொடர்ந்து சரியானவர்களை தெரிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுதல் வேண்டும். தகுதியான விண்ணப்பதாரர்களை நேர்முகப்பரீட்சை அல்லதுபரீட்சைக்கு அழைத்தல் வேண்டும்.

ஆட்சேர்த்தல் சம்பந்தமான நடவடிக்கையில் விண்ணப்பதாரிகளை மதிப்பிட பெரும்பாலான நிறுவனங்களால் கைக்கொள்ளப்படுவதே பரீட்சையாகும். பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பரீட்சையையும், நேர்முகப்பரீட்சையினையும் கருதிக் கொண்டு தெரிவானது மேற்கொள்ளப்படும் பெரும் எண்ணிக்கை

(10ம் பக்கம் பார்க்க)

## மண்வளம்

# பப்பாசியைப் பாதிக்கும் வைரசு நோய்

எங்கள் பப்பாசி மரத்தின் நுனி இலைகள் ஏன் மஞ்சள் நிறமாக வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றன இது பெரும் பாலானோர் கேட்கும் வினாவாகும். பப்பாசிச் செய்கையில் ஏற்படும் முக்கியமான பிரச்சினையும் இது தான், இதற்கு ஒரே வார்த்தையில் பதில் சொல்வதாயின் வைரசு நோய் எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். ஆனால் இதனை முற்றாகக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் இந் நோய் பற்றிய பல விபரங்களை அறிந்து வைத்திருப்பது அவசியமாகும். இதன் மூலமே நோய் வராமல் தடுக்கலாம்;

வைரசு நோய்கள்;

நோயால் பாதிக்கப்பட்டபப்பாசி மரத்தின் நுனி இலைகளைக் கவனமாக அவதானித்தால் அவற்றில் மஞ்சள் நிறமான சித்திர வடிவங்களைக் காணலாம். இதைத் தவிர இலைக் காம்புகளிலும் தண்டுகளிலும் பச்சை நிறமான, நீர்த் தன்மையான வரிகளையும் புள்ளிகளையும் காணலாம்.நோயுற்ற மரங்களில் உருவாகும் காய்களில் வளைய வடிவான புள்ளிகள் காணப்படுவதால் இது வளையப்புள்ளி வைரசு நோய் எனவும் குறிப்பிடப்படும். இதுவே இலங்கையில் பரவலாகக் காணப்படும் வைரசு நோயாகும். இதைத் தவிர மஞ்சள் சித்திர வடிவ வைரசு நோயும் இங்கு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது ஆனால் உலகில் இவற்றை விட ஏராளமான வைரசு நோய்கள் உள்ளன.

நோய் அறிகுறிகள்;

நோயுற்ற மரத்தைக் கவனமாக அவதானித்தால் மஞ்சள் நிறமடைந்து நுனி அரும்புகளிலிருந்து ஆரம்பமாவதைக் காணலாம். இந் நோயைக் காவும் அழுக்கணவன் என்னும் பூச்சிகளுக்கு இவ்விளம் அரும்புகள் மஞ்சள் நிறமாகவே தோன்றும் இப் பூச்சிகள் மஞ்சள் நிறத்தினால் அதிகளவில் கவரப்படும். இதனால் இவை நுனி அரும்புகளினால் கவரப்பட்டு அவற்றின் சாற்றை உறிஞ்சிக் குடிக்கத் தொடங்கும் அத்துடன் இளம் அரும்புகளை இலகுவாகக் குத்தி உறிஞ்சலாம். எனவே தான் இளம் அரும்புகளில் நோய் ஏற்படத்தொடங்கி அவை படிப்படியாக ஏனைய முதிர்ச்சியடைந்த இலைகளுக்கும் பரவும்.

சில வேளைகளில் உயரமான மரங்களை இவ்வைரசு நோய் பாதிப்பதில்லை. ஆனால் அம்மரங்களில் உருவாகும் கீழேயுள்ள கிளைகளில் நோய் ஏற்படலாம். இதற்கான முக்கிய காரணம் காவிகளான அழுக்கணவன் அதிக உயரத்திற்கு பறக்க முடியாமல் இருப்பதாகும். அத்துடன் வைரசும் மரத்தில் மந்தகதியிலேயே பரவும். இதனால் நீண்ட நாட்களின் பின்னரே இவ்வுயரமான மரங்களில் நோய் அறிகுறியை அவதானிக்கலாம்

நோய் பரவுதல்:

இவ்வைரசு நோய் பப்பாசிப் பாலின் மூலமே பரவும், இளம் இலைகளையும் அரும்புகளையும் குத்தி சாற்றை உறிஞ்சும் அழுக்கணவன் பூச்சிகளின் மூலமே இந் நோய் மரத்திற்கு மரம் பரவுகின்றது. நோயுற்ற மரத்தை குத்தி சாற்றை (பாலை) உறிஞ்சும் போது அதனோடு வைரசும் பூச்சியின் உடலிற் சேரும் இதன் பின் ஆரோக்கியமான மரத்தைக் குத்தும் போது நோய் அம்மரத்திற் பரவும்.

இதை தவிர பப்பாசிப் பால் வெட்டும் தோட்டமாயின் பால் வெட்டும் கத்தியின் மூலமும் நோய் பரவும். ஆனால் இலங்கையில் பால் வெட்டும் தோட்டங்கள் குறைவு. எனவே இம்முறையில் நோய் பரவுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாவே உள்ளன.

வளையப் புள்ளி வைரசு நோய் விதைகளின் மூலம் பரவுவதில்லை. ஆனால் இவ் வைரசுவின் சில இனங்கள் விதையின் மூலம் பரவலாம். எனவே எப்போதும் நோயில்லாத மரத்திலிருந்து விதைகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

போரோன் என்னும் போசணைச் சத்தின் பற்றாக்குறைவாலும் காய்களில் தடிப்புகள் அல்லது விகாரமடைந்து காணப்படலாம். எனவே வைரசு நோயையும், போரோன் பற்றாக்குறை அறிகுறியையும் தெளிவாக வேறுபடுத்தி அறிவது மிக முக்கியமானதாகும்.போரோக்ஸை இடுவதன் மூலம் போரோன் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம்.

ஏனைய விருந்து வழங்கித் தாவரங்கள் இவ் வைரசுக்கு மிகக் குறைந்த வளவான விருந்து வழங்கித் தாவரங்களே உள்ளன. சில நாடுகளில் கெக்கரி குடும்பப் பயிர்களை இவ் வைரசு பாதிக்கலாம் என அறியப்பட்டுள்ளது. எனவே, கெக்கரியுடன் பப்பாசியைச் செய்கை பண்ணுவது உசிதமானதல்ல, கெக்கரி அழுக்கணவன்கள் பெருகுவதற்கான வாய்ப்புக்கள் உண்மையால் இந் நோய் பப்பாசி மரங்களிக் அதிகளவில் பரவ வழியேற்படும். ஏதாவதொரு தோட்டத்தில் நோயுற்ற மரம் காணப்படுமாயின் காவிகள் மூலம் இந் நோய் பரவலாம்.

எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

பொதுவாக வைரசு நோயைக் கட்டுப்படுத்த எவ்விதமான இரசாயனங்களும் இல்லை. எனவே நோயை வராமல் தடுப்பதே அவசியமானதாகும். இதற்கு வைரசு நோயை எதிர்த்து வளரும் பப்பாசி வர்க்கங்களைச் செய்கை பண்ணலாம், ஆனால் இதுவரை இவ்வாறான வர்க்கங்கள கண்டுபிடிக்கப்படவில்லை

அழுக்கணவன் ஊதா நிறமான இலைக் காம்புகளையும் கரும் பச்சை நிறமான இலைகளையும் காம்புகளையும் கொண்ட மரங்களை விரும்புவதில்லை. இளம் பச்சை நிறமான இலைகளையும், காம்புகளையும் கொண்ட மரங்களையே அழுக்கணவன் அதிகளவில் விரும்பும். எனவே இவ்வாறன மரங்களில் வைரசு.நோய் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளன. இதனால் சில விவசாயிகள் ஊதா நிறமான காம்புகளைக் கொண்ட பப்பாசி வர்க்கங்களை விரும்புகின்றனர்.

(8ம் பக்கம் பார்க்க)

# சமூக அபிவிருத்தியும் கூட்டுறவும்

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்னும் முதுமொழிகள் எங்களுக்கு ஒற்றுமையின் சக்தியை எடுத்துக் காட்டுகின்றன. இந்த குறிக்கோள்களுடன் தான் கூட்டுறவு நாட்டுயர்வு என்ற கூட்டுறவுத்துறையின் மகுடவாசகமும், வானவில்லின் வர்ணங்கள் ஒன்றுசேர்ந்தால் பெறப்படுகின்ற நிறம் வெள்ளை, தூய்மையின் இலக்கணம் என்பதால் கூட்டுறவுக் கொடியில் வானவில்லின் நிறங்களையும் இலச்சனையில் கோர்த்த இரு கரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. கூட்டுறவு நாட்டுயர்வு என்பது நாட்டின் அபிவிருத்தியை அதாவது முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகிறது. அபிவிருத்தி என்ற எண்ணக்கரு இன்று பரந்த விரிந்த ஒரு எண்ணக்கருவாக காணப்படுகிறது. ஒரு சமூகத்தின் பொருளாதார, சமூக, அரசியல் கலாச்சார ஆன்மீக, சூழல் மேம்பாட்டினை எடுத்தியம்புகின்ற ஒரு எண்ணக்கருவாக காணப்படுகின்றது. இன்று பல நாடுகள் ஏதாவது ஒரு திசையில் முன்னேற்றத்தினை காணுகின்ற போது பிறிதொருதிசையில் பின்னடைவை சந்திக்கிறது. இவ்வாறு இல்லாமல் எல்லாத்துறையிலும் மேம்பாடு காண்பதே மிகவும் அவசியமாகும். இதற்கு கூட்டுறவு ஒரு சிறந்த நிறுவன அமைப்பாக பலராலும் கருதப்படுகிறது.

ஒன்றரை நூற்றாண்டிற்கு முன்னர் கைத்தொழில்புரட்சியின் போது தொழிலாளர் வர்க்கத்தின் பொருளாதார, சமூக, அரசியல் முன்னேற்றத்திற்காக தோற்றம் பெற்ற கூட்டுறவு பின்னர் பலநாடுகளிலும் காலூன்றி அந்நாடுகளின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பைச் செய்துள்ள போதிலும் உலகமயமாதல், தனியார் மயப்படுத்தல், சுதந்திர பொருளாதாரம் என்ற இன்றைய பொருளாதார செல்நெறியிலும் செயற்பாடுகளிலும் அதாவது இசும Merentilisum '' Capitalism, Socialism, communism என்பவற்றில் இருந்தது '' சேசன் '' Globatization, Privatization liberalization என்ற மாற்றங்களினால் கூட்டுறவு தோற்றுவிக்கப்பட்ட நாடுகளில் அவை இந்த மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கக்கூடியவாறு மாற்றமடைந்து பெரிய பல்தேசிய நிறுவனங்களாக வந்து சமூகத்தோடு உள்ள தொடர்புகளை இழந்து நிற்கின்ற நிலையை ஏற்றுக்கொண்ட அதேசமயம் கூட்டுறவு ஒரு வியாபார நிறுவனம் என்பதை மறந்து செயற்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இன்று சர்வதேச மட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களை செயற்படுத்துவதில் மனித விழுமியங்கள் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

1991ம் ஆண்டு றியோ டி ஜெனிரோ (Rio de Janiro) நகரில் இடம்பெற்ற உலக உச்சிமகா நாடும் World Summit 1995ம் ஆண்டு கோபன்கேயனில் (Copenhagen) இடம் பெற்ற ஐக்கிய நாடுகளின் உச்சிமகாநாடும் (Social Summit) நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியில் கூட்டுறவுத்துறை ஆற்றக்கூடிய முக்கிய பங்கினை ஏற்றுக் கொண்டுள்ளது.

திரு. இ. நந்தகுமாரன்
பீடாதிபதி,
வவுனியா வளாகம்,
வவுனியா.

1995ம் ஆண்டு யூலை மாதம் முதன்முதலாக சர்வதேச கூட்டுறவு தினம் பிரகடனப்படுத்தப்பட்ட போது ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் தனது உரையில் குறிப்பிட்டதக்கமக்கள் தொகையினது உற்பத்தித்திறன், தொழில்களை உருவாக்கவும் வறுமையை ஒழிக்கவும், சமூக ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் கூடிய சக்தியை தமது கரங்களிலே கொண்டிருக்கக் கூடிய ஒத்த கட்டமைப்பை கூட்டுறவு தொழில் முயற்சிகள் வழங்குகின்றன. அவை மக்கள் மயப்படுத்தப்பட்ட சமத்துவம், நீதி, ஒற்றுமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட நிறைத்து நிற்கக்கூடிய சமூக நிறுவனங்களுக்கு ஒருமாதிரியாக காணப்படுகின்றது என்று குறிப்பிட்டார்.

மான்செஸ்ரரில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு அமைப்பின் மாநாட்டில் கூட்டுறவுத்துறைக்கு புதிய பரிமாணமாக சமூகத்தின் மீது அக்கறை, அங்கத்தவர் மீது கரிசனை என்பன சேர்த்துக் கொள்ளப்பட்டது; இந்த மாநாட்டில் சமூக அபிவிருத்திக்கான ஒரு சூழலை உருவாக்கக் கூடியவாறு கூட்டுறவு அமைப்புக்கள் செயல்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

தெற்கு, தென்கிழக்கு ஆசிய பொருளாதார திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான ஒரு கருவியாக கூட்டுறவு நிறுவனங்களை பயன்படுத்தி வருகின்றது. முன்னர் குறிப்பிட்ட இரண்டு உச்சிமாநாடுகளும் கூட்டுறவுத்துறை நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கும், அரசாங்கங்கள், கூட்டுறவுத்துறை ஆற்றக்கூடிய பங்கு பற்றியும் விதந்துரைகளை வெளியிட்டன. கீழ்மட்ட வருமானம் பெறும் சமூகங்களின் கைகளைப் பலப்படுத்தக் கூடியவாறான கொள்கை மாற்றங்களை கூட்டுறவுத்துறை செயற்படுத்த வேண்டியுள்ளது.

சமூக உச்சிமாநாட்டில் வறுமையில் வாடுபவர்களினதும், பின்தள்ளப்பட்டவர்களதும் நலனை மேம்படுத்தவும், தனியாகவும், சமூகமாகவும் பொருளாதார முயற்சிகளை மேற்கொள்ளக் கூடியவாறு திறந்த சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய நடைமுறைகளை அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அரசாங்கங்கள் வறியவர்களுக்கு நிதி உதவி செய்யக்கூடியவாறான பல புதிய மரபு ரீதியற்ற நிதிநிறுவனங்களின் தோற்றத்திற்கு உகந்த வகையில் சட்டதிட்டங்களை நீக்க முன்வந்துள்ளன. இத்தகைய நடைமுறைகள் வறிய மக்களின் நிதித்தேவையை பூர்த்திசெய்ய உதவும் என நம்பப்படுகிறது, புதிய உலக வர்த்தக அமைப்பின் வர்த்தகம் தொடர்பான செயற்பாடுகள் ஒரு சாராருக்கு சாதகமாகவும் மற்றொரு சாராருக்கு பாதகமாகவும் இருக்கின்றது. சில உற்பத்தியாளர்கள் ஏற்றுமதி மூலம் நன்மை பெற வேறுசிலர் இறக்குமதியினால் தமது சந்தையை இழந்து நிற்கின்றனர். இங்கு அரசாங்கங்கள், கூட்டுறவுத்துறை, தனியார்துறை, மக்கள் அமைப்புகளுக்கிடையில் நெருங்கிய ஒத்துழைப்பு நேர்மையான போட்டி வியாபாரத்தில் நிதிமுறையான செயற்பாடுகள் தேவை எனப்பது உணரப்பட்டது. மூடிய பொருளாதாரங்களாக இருந்த பல பொருளாதா

(7ம் பக்கம் பார்க்க)

## சமூக அபிவிருத்தியும்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் திறந்து விடப்பட்ட பின் பல நாடுகளில் வறிய பிரிவினர் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்ததை அறிகின்றோம்.

சர்வதேச நிதி நிறுவனங்கள் பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரங்களினை சீர் செய்வதற்கான முன்மொழிந்த அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் கூட்டுறவு துறைகளுக்கு பேரிடியாக அமைந்தன. அவை அனுபவித்து வந்த மானியங்கள் அகற்றப்பட்டதே இதற்கு காரணமாகும். அரசாங்கங்கள் தமது இறை கொள்கையையும் ஏனைய வறிய மக்களுக்கான கொள்கையையும் மீளாய்வு செய்வது அவசியமாகும். இத்தகைய கொள்கைகள் வறியவர்களையும் பாதிப்புக்குள்ளாகின்றவர்களையும் சென்றடைவதை உறுதிசெய்ய வேண்டும். சர்வதேச நிதி நிறுவனங்கள், முன்மொழிவுகள் வர்க்க ரீதியான ஏற்றுமதி துறையை ஊக்குவித்த அதே சமயம் உள்நாட்டு விவசாயத்தை ஊக்கமிழக்கச் செய்துள்ளது.

### வறுமை ஒழிப்பில் கூட்டுறவுத் துறையின் பங்கு

கூட்டுறவுத் துறைக்கு வறுமையை இல்லாதொழிந்து சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான உள்ளார்ந்த சக்தி காணப்படுகின்றது. பின்வரும் செயற்பாடுகள் மூலம் வறுமை ஒழிப்பை மேற்கொள்ள முடியும். பின் தங்கிய சமூகங்களை குழுக்களாக ஒன்று திரட்டி அவர்களை சுய உதவி அமைப்புக்கள் சுய சார்பு நிறுவனங்களாக ஆக்குதல். இந் நிறுவனங்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்களையும் அதற்கான வளங்களையும் வழங்குதல் சுய முகாமை தலைமைத்துவம் போன்ற நுட்பங்களில் பயிற்சி வழங்குதல் சந்தைகளுக்கான தொடர்புகளை பலப்படுத்தல் அடிப்படை வசதிகளையும் அவற்றை பெற்றுக் கொள்வதற்கான வளங்களையும் வழங்குதல். தொழில் பயிற்சிகள் புதிய தொழில் நுட்பங்கள் போன்றவற்றை உற்பத்தி சந்தைப்படுத்தல் செயல்முறைகளில் அறிமுகப்படுத்தல், நிலைத்து நிற்கக்கூடிய வாழ்க்கைக்கான வளங்களை ஒன்று திரட்டுதல், சூழல், சுகாதாரம் போன்றவற்றில் ஆர்வம் ஏற்படுதல் சமூக விழுமியங்கள் பெறமானங்கள் என்பவற்றினை ஊக்குவித்தல் என்பவற்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

சர்வதேச கூட்டுறவு அமைப்பில் 835 மில்லியன் அங்கத்தவர்கள் 97 நாடுகளில் பரந்து காணப்படுகின்றனர். இதில் 500 மில்லியன் மக்கள் 26 ஆசிய பசுபிக் நாடுகளில் வாழ்கின்றனர் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஒன்றின் படி 2360 மில்லியன் மக்கள் அல்லது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மொத்த சனத்தொகையில் 59 வீதத்தினர் கூட்டுறவுத் துறையுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்கின்றனர். எனவே தான் கூட்டுறவுத் துறைக்கு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்களவு பங்கு வகிக்க முடியும் என நம்பப்படுகின்றது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பெரும்பாலானமக்கள் கிராமப் புறங்களில் வாழ்கின்றனர் அவர்களது பிரதான பொருளாதார நடவடிக்கை விவசாயமாக இருக்கின்றது. சி.க.கூ. சங்கங்கள் கிராமிய பொருளாதாரத்திற்கு நிதியுதவி வழங்குவதில் முக்கிய பங்கை பெற்றுள்ளது. இந்த பொருளாதாரங்களில் மக்களின் தேவைக்கேற்ப புதிய வகையான கூட்டுறவு துறைகள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்வகைச் சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், சௌக்கிய கூட்டுறவுச் சங்கங்கள், மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அரசாங்கங்கள் கட்டமைப்புச் சீராக்கம், காணிச் சீர்திருத்தம், விவசாயத்தை வர்த்தகமயமாக்கல் மானியங்களை அகற்றல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கூட்டுறவு அமைப்புக்கள் பலதரப்பட்ட சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது.

### வேலைவாய்ப்பும் நிலைத்துநிற்கக் கூடிய வாழ்வும் :

அரசின் கொள்கை மாற்றங்கள் அரசாங்க வேலை கிடைப்பதற்கான வாய்ப்புக்களை குறைத்துள்ளது. இந்த இடைவெளியை நிரப்புவதற்கு கூட்டுறவுத்துறை பல வழிகளில் துணைநிற்கின்றது கூட்டுறவுத் துறை தனது தொழில்முயற்சிகளில் நேரடியாகவும், சுயதொழில் வேலைவாய்ப்பு மூலமும் மறைமுகமாகவும், தொழில்கள் தேடக்கூடிய அல்லது தாமாக தொழில்களை செய்வதற்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதன் மூலமும் வேலைவாய்ப்பை பெருக்குவதற்கு உதவியளித்து வருகின்றது. சில கூட்டுறவுத் துறைகள் சுய தொழில் வேலைக்கு சகல வளங்களையும் பெற்று வருகின்றன. இதே போன்று நிலைத்து நிற்கக்கூடிய வாழ்விற்கு, மீளபுதுப்பிக்கக்கூடிய வளங்களை பயன்படுத்தல், மிகை நுகர்வை தவிர்த்தல், சூழல் பற்றிய உணர்வை ஏற்படுத்துதல், அடிப்படை தேவைகளை வழங்குதல் போன்றவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றன. கூட்டுறவு தத்துவம் கல்வியூடாகவே மக்கள் சக்தியை பெறலாம் என்பதை நம்புகின்றது, இதனால் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

### சமூக ஒருங்கிணைப்பு

இயல்பாகவே கூட்டுறவு அமைப்பு ஜனநாயக மரபில் செயல்படுவதுடன் சமத்துவம் சமூக நீதி என்ற உயர்ந்த இலக்குகளையும் தன்னகத்தே கொண்டதாகும். இயற்கையின சீற்றங்கள் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளுக்கு ஏற்றவாறு உதவி வழங்கல் சமாதான முயற்சிகளுக்கு வேண்டிய சூழலை ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் சமூக ஒருங்கிணைப்புக்கு உதவுகின்றது கூட்டுறவு அமைப்பின் மூலம் சமூக விழிப்பு [illegible]வு சமூக அமைதி என்பவற்றை ஏற்படுத்துவது சாத்தியமாகும்.

### முடிவுரை

மாறிவரும் பொருளாதார சூழ்நிலைகள், வர்த்தக உறவுகள் வாழ்க்கை வழிமுறைகள் என்பவற்றை உள்வாங்கி மூல தத்துவங்களில் இருந்து பெரிதும் விலகி விடாமல் தேவைக்கு ஏற்ற மாற்றங்களை செய்து கூ. துறையை நவீனமயப்படுத்துவதன் மூலம் சமூக மேம்பாடு சமூக வளர்ச்சி என்பவற்றில் கூட்டுறவுத் துறை பெரும் பங்காற்ற முடியும் என்பது அனைவரதும் நம்பிக்கையாகும்.

---

உனது நண்பனுடன் குறைவாக நட்புக் கொள், ஏனெனில் அவன் உனக்கு எதிரியாகலாம். உனது எதிரியுடன் குறைவாகக் கோபம் கொள் ஏனெனில் அவன் உனக்கு நண்பனாகலாம்.

- அலி (றழி) -

# பல சிரமங்களின் மத்தியிலும் யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்துள்ளது.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

2001ம் ஆண்டின் விசேட பயிற்சித் திட்டமாக மாவட்ட மட்டத்தில் மகளிர்களுக்கான இதழியல் பயிற்சிநெறியொன்றும் நடாத்தப்பட்டது இப்பயிற்சி நெறியில் 33 மகளிர்கள் இணைக்கப்பட்டு 27 பேர் பயிற்சி நெறியைப் பூரணப்படுத்தி உள்ளனர். இப்பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம், பத்திரிகைத்துறை, சட்டத்துறைபோன்ற பல்வேறு துறைகளில் இருந்து விரிவுரையாளர்கள் ஏற்பாடு செய்யப்பட்டு பயிற்சிநெறி நடாத்தப்பட்டது.

60 பேர் கொண்ட மாவட்ட மட்டத்திலான விசேட தலைமைத்துவப் பயிற்சிநெறி ஒன்றும், 50 பேர் கொண்ட புத்தகம் கட்டுதல் பயிற்சி நெறி ஒன்றும் நடத்தப்பட்டது

தெல்லிப்பழை கலைச் செல்வி இ. க. கூ. சங்கம், தெல்லிப்பழை ப. தெ. வ. அ. கூ. சங்கம் ஆகியவற்றிற்கு தனித் தனியே 07 நாட்கள் கொண்ட சுயதொழில் பயிற்சிகள் நடத்தப்பட்டது.

அத்துடன் தெல்லிப்பழை கலைச் செல்வி சி. க. கூ. சங்கம் தெல்லிப்பழை ப. தெ. வ. இ. கூ. சங்கம் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் ஆகியவற்றின் மகளிர் இணைக்கப்பட்டு குறுகியகால 22 நாட்கள் கொண்ட சுயவேலைப் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டது அத்துடன் கால் நடை வளர்ப்புத் தொடர்பாக சங்க மட்டத்தில் மகளிர்களுக்கான பயிற்சியும் கூட்டுறவுச் சங்கங்களின் சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கான மாவட்ட மட்டத்திலான பயிற்சி நெறியும் நடத்தப்பட்டது.

வழமை போன்று இவ்வாண்டும் அனைத்துலக பெண்கள் தினத்தை யொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே பேச்சு கட்டுரை போட்டிகளும் மகளிர் அங்கத்தவர்களுக்கிடையே கவிதைப் போட்டியும் நாடகப் போட்டியும் சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கு குழு நடனப் போட்டியும் மகளிரால் நடத்தப்பட்டது.

தற்போது உடுப்பிட்டி மத்தி மகளிர் சி. க. வ. கூ. சங்கத்திலும் யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையிலும் மனைப் பொருளியல் அடிப்படைப் பயிற்சிநெறி புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்ட மட்டத்திலான மனைப்பொருளியல் டிப்ளோமாப் பயிற்சி நெறிக்கும் புதிய பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களின் நினைவு தினம்

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களின் நினைவு தினமான 05-12-2002 அன்று பொதுத் தேர்தல் காரணமாக வழமை போன்று அன்னாரின் நினைவு தினம் பெரியளவில் ஏற்பாடு செய்து கொண்டாடப்படவில்லை. எனினும் சபை மண்டபத்தில் அவரை நினைவு கூர்ந்து அமைதியான முறையில் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் மண்டபத் திறப்புவிழா

நாட்டின் போர்ச் சூழலில் அழிவுற்ற நிலையில் இருந்த இம் மண்டபம் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை, கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவாளர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள் ஆகியோர் வழங்கிய நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு 19-01-2002 அன்று யாழ் அரசாங்க அதிபர் திரு சண்முகநாதன் அவர்களால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

---

## பப்பாசியை பாதிக்கும்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஈரவலயத்திலேயே இந் நோய் பரவலாகக் காணப்படுகின்றது. உலர் வலயத்தில் பப்பாசி விரியமாக வளர்வதால் அவை வைரசுவை ஓரளவேனும் எதிர்த்து வளரும்; அத்துடன் அங்கு குறைந்த எண்ணிக்கையான நோயுற்ற மரங்களே காணப்படுவதால் நோய் பரவும் வேகம் குறைவு ஆனால் காலம் செல்ல இங்கும் நோய் விரைவில் பரவலாம். ஆரம்பத்தில் கவனமாக அவதானித்துநோயால் பாதிக்கப்பட்ட மரத்தை உடனடியாகவே பிடுங்கி எரித்து விடல் வேண்டும். இதனால் இளம் மரங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம்.

---

## தெரிந்து கொள்ளுங்கள்

- கொழும்புத்திட்டம் ஆரம்பித்த போதும் தற்போதும் அங்கம் வகிக்கும் நாடுகள் எத்தனை - ஆரம்பிக்கப்பட்டபோது 07 நாடுகள் தற்போது 27 நாடுகள்
- கொழும்புத்திட்டத்தில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய நாடு - பிரித்தானியா
- பொது நலவாயம் ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கம் - சுதந்திரம் பெற்ற நாடுகளுக்கிடையே கூட்டுறவை வலுப்படுத்த
- பொது நலவாயத்தில் அங்கம் வகிக்கும் ஆசிய நாடுகள் நான்கு - இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மலேஷியா
- பொதுநல வாயத்தினால் இலங்கை அடையும் உதவிகள் - பல்கலைக்கழக விருத்திக்கான உதவிகள், நீர் மின்சக்தியை பெறுவதற்கான உதவிகள்

தொகுப்பு:
தர்மிஷா

# சுகவளம்

## மெல்லக் கொல்லும் மென் பானங்கள்

மென்பானங்களின் உற்பத்தியாளர்கள் உடல்நலத்திற்கு, ஏற்றவை உற்சாகம் தருகிறது என விளம்பரம் செய்து வருகின்றனர் 90% நீர் |உண்டு என்றெல்லாம் விளம்பரத்திற்கு அளவேயில்லை,

உண்மை என்னவென்றால், மென்பானங்கள், அவற்றில் அடங்கியுள்ள பொருட்களைப் பொறுத்தும், அவை நாம் உண்ணும் உணவில் உள்ள எந்தெந்தப் பொருட்களை இடம் பெறச் செய்கின்றன என்பதைப் பொறுத்தும், நமது உடல் நலத்திற்கு அபாயங்களை விளைவிக்கக் கூடியவையாயிருக்கின்றன.

உடல் பருமன், நீரிழிவு, இதய இரத்த நாள |நோய்கள், போன்ற அபாயத்தைப்பெருக்குவதோடு, சமூக உளவியல் சிக்கல்களையும் உண்டாக்குகின்றது. போதுமான உடற்பயிற்சியின்மை முதல், அதிக அளவு கலோரிகளைச் சேர்த்தல்மற்றும் மரபுசார்ந்த கோளாறுகள் வரை எண்ணற்ற காரணிகள், உடல்பருமனுக்குகாரணமாய் அமைகின்றன. மென்பானங்களை அருந்துவதாலும் உடல் பருமன் வெகுவாகக் கூடுகிறது.

பால் அல்லது பிற பால்பண்ணை உற்பத்திப் பானங்களை அருந்துவதற்கு பதில் மென்பானங்களை அருந்துபவர்கள் உட்கொள்ளும் கல்சியத்தின் அளவுகுறைவாகவே இருக்கும் கல்சியம் குறைந்த உணவுப் பொருட்களை உட்கொண்டுவந்தால் எலும்புகள் எளிதில் முறியும் தன்மையுடைய எலும்பு மென்பாடு நோய்க்கு இட்டுச் சென்று விடும். பொஸ்பரஸ் அடங்கிய சோடா பானங்களை அளவுக்கு மீறி அருந்துவது இரத்தத்தில் கல்சியத்தின் அளவைக் குறைத்துவிடும்,

உணவில் உட்கொள்ளப்படும் கல்சியம். பொஸ்பரசின் அளவு 1.1 என்ற அளவில் இருக்க வேண்டும். இந்த அளவு 1.2 என்று ஆகிவிடுமானால், இந்த அளவைச் சரிசெய்ய எலும்புகளிலுள்ள கல்சியம் எடுக்கப்பட்டு, எலும்பு மென்பாடு நோய் உட்பட பல்வேறு கல்சியக் பற்றாக்குறைவுக் கோளாறுகளுக்கு வழிவகுக்கும். மென்பானங்களை அதிகளவில் அருந்தி வருவது பொஸ்பரஸ் உட்கொள்வதை அதிகரித்து, கல்சியம் பொஸ்பரஸ் அளவு சமநிலையற்று விடவும் செய்து விடும்.

பொஸ்பரஸ் அடங்கிய கோலா மென்பானங்களைக் குடிக்க விரும்பினால், அதற்கேற்றபடி நீங்கள் உட்கொள்ளும் கல்சியத்தின் அளவும் அதிகரிக்க வேண்டும் எடுத்துக்காட்டாக, நீங்கள் குடிக்கும் ஒவ்வொரு குளிர்பான போத்தலுக்கும் 12 அவுன்ஸ் பால் அருந்த வேண்டும். அல்லது குறைந்தது 500 மி. கிராம் கல்சியம் அடங்கிய கல்சியம் மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும்.

இன்சுலின் எதிர்ப்புத்தன்மை உடையவர்களுக்குச் சீனி அதிகம் சேர்ந்த உணவுகள் இதயநோயை உண்டாக்கக்கூடும். வயது வந்தோரில் நான்கில் ஒரு பகுதியினருக்கு ட்ரைகிளிசரைட்களின் (Triglyceri-des) அளவு உயர்ந்ததும் நன்மை செய்யும் HDL கோலஸ்ட்ரோலின் அளவு குறைந்தும் உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது காபோஹைட்ரேட் (Carbohydrates) மிகுந்த உணவுகளை உண்ணும் போது அவர்களது அவர்களது ட்ரிகிளிசரைட் இன்சுலின் அளவுகள் உயர்கின்றன. இன்சுலின் எதிர்ப்புத்தன்மை உடையவர்களின் மென்பானங்களையும் மற்ற சீனி உணவுகளையும்குறைத்துக்கொள்வது நல்லது.

சிறுநீரகக் கற்கள்

சிறுநீரகக்கற்கள் உருவாவதற்கு மிகஅதிக வலியுண்டாக்கும்கோளாறுகளில் ஒன்று. சிறுநீரகக்கற்கள் உருவாவதற்கு மென்பானங்களைப் பருகுவதற்கும் தொடர்புண்டு என்றுஆய்வுகள் புலப்படுத்திய பிறகு, ஆய்வாளர் இதற்கான தடுப்பு ஆய்வுகளில் ஈடுபட்டனர்.

சிறுநீரகக் கற்களால் பாதிக்கப்பட்ட 1009 பேர் நாளொன்றிக்கு குறைந்தது 5- 1/3 அவுன்ஸ் சோடா அருந்தி வந்தவர்கள் என அந்த ஆய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

மென்பானங்களில் உள்ள பல்வேறு பழக்கத்திற்கு அடிமைப்படுத்தும் பொருட்கள் உள்ளன, பெரும்பாலான குளிர்பானங்களில் 'கா'ஃபீன் எனப்படும் பழக்கத்திற்கு அடிமைப்படுத்தும் போதைய பொருள் அடங்கியுள்ளது, மிகப்பிரபலமான ஏழு குளிர்பானங்களில் ஆறில் 'கா'ஃபீன் இடம்பெற்றுள்ளதற்கு அதன் பழக்கத்திற்கு அடிமைப்படுத்தும் தன்மையே எனலாம்.

'கா' பீன் அடங்கிய மென்பானம் ஒன்றை 12 அவுன்ஸ் அருந்துவது 20 மில்லி கிராம் கல்சியம் இழப்பை உண்டாக்குகிறது.

கா. பீன் உணர்ச்சிவசபடச் செய்யும் எரிச்சல்உணர்வையும் தூக்கமின்மையையும் உண்டாக்கும், இதயத்துடிப்பை அதிகரிக்கச் செய்யும்.

கா. பீனில் உள்ள அடிமைப்படுத்தும் குணத்தால் இப்பானங்களை அருந்தும் மக்கள் அவற்றின் பிடியில் சிக்கிக்கொள்கிறார்கள். மென்பானங்களில் பயன்படுத்தப்படுகிற பல்வேறு அடிமைப்படுத்தும் பொருட்கள் அலர்ஜி மற்றும் எதிர்விளைவுகளை உண்டாக்குகின்றன' இப்பானங்களில் சேர்க்கப்படும் மஞ்சள் நிறப்பொருள் ஆஸ்த்மா, தோல், பத்து, வீக்கம், மூக்கு ஒழுகுதல் முதலியவற்றை உண்டாக்குகிறது.

சிவப்பு நிறம் கோச்சினில், கேமீன் போன்ற பொருட்கள் உயிருக்கு ஆபத்தையும் எதிர் விளைவுகளையும் உண்டாக்கக்கூடியன, சக்கரீனின் இடத்தைப் பிடித்துள்ள ஏஸ்பர்டேம் சீனிக்கு (மாப்பொருள்) சிறுநீர் மண்டலம் மற்றும்சிறுநீர்ப்பைப் புற்றுநோய்களை உண்டாக்குகின்றது என்றும் ஆய்வுகள் மூலம் தெரிகிறது

## முகாமைத்துவத்தில்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட விண்ணப்பதாரிகளில் திறமையானவர்களை கண்டு கொள்ள. பரீட்சை பயன்படும். இப்பரீட்சை மூலம் திறமையானவர்களை கண்டு கொள்ள விரும்பினால் அது நல்ல பரீட்சையாக இருத்தல் வேண்டும். நல்ல பரீட்சையின்பெறுமதித்தன்மை (Validit) நம்பிக்கைத்தன்மை (Reliability) நியமனத்தன்மை (Norms) போன்ற பண்புகள் இருத்தல் வேண்டும் பொதுவாக பரீட்சைகள் நான்கு வகைப்படுத்தலாம்.

அ) புத்திக்கூர்மைப்பரீட்சை
Intelligence Test

ஆ) தகுதிப்பரீட்சை
(Aptitude Test)

இ) தேர்ச்சி பரீட்சை
(Proficiaccy Test)

ஈ) ஆளுமைப்பரீட்சை
(Personality Test

உ) உளவியல் பரீட்சை
(Psychological Test)

புத்திக்கூர்மைப் பரீட்சை என்பது விண்ணப்பதாரர்களுக்கு இருக்கும் நுணுக்கமான அறிவு ஆற்றலை மதிப்பீடு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் பரீட்சை இதுவாகும் அதாவது விண்ணப்பதாரரின் ஞாபகசக்தி, விரைவாகவும் பகுத்தறிவாகவும் சிந்திக்கும் ஆற்றல், பிரச்சனைகளைத் தீர்ப்பதில் கொண்டுள்ள திறன் என்பனவற்றினை பரீட்சிப்பதாகும்;

தகுதிப்பரீட்சை எனப்படுவது விண்ணப்பதாரர் குறிப்பிட்ட வேலைக்குப் பொருத்தமானவரா அல்லது பொருத்தமற்றவரா எனக் கண்டறியும் பொருட்டு அவரின் ஆற்றல் பற்றிய தகவல்களை அறிவதற்கான பரீட்சையாகும். போதியபயிற்சியினை வழங்கும் போது அவர் குறிப்பிட்ட வேலையினைக் கற்றுக் கொள்ளும் ஆற்றலைக் கொண்டுள்ளாரா எனக் கண்டறிய இப்பரீட்சை உதவும்.

தேர்ச்சிப்பரீட்சை எனப்படுவது விண்ணப்பதாரர் குறிப்பிட்ட வேலை தொடர்பாக போதிய தேர்சியினைக் கொண்டுள்ளாரா எனக் கண்டறிவதற்கான பரீட்சையாகும். உதாரணமாக தட்டெழுத்தாளரை தெரிவு செய்யும் போது தட்டெழுத்து வேலையில் அவரின் தேர்ச்சியினைக் கண்டறியும் பொருட்டு ஒரு குறிப்பிட்ட பந்தியை தட்டெழுத்து செய்யும் படி கேக்கலாம்.

ஆளுமைப்பரீட்சை என்பது விண்ணப்பதாரரின் பல்வேறு பண்புகளை அளவிடும் பொருட்டு மேற்கொள்ளப்படும் பரீட்சையாகும். விண்ணப்பதாரர் பிறருடன் இணைந்து வேலை செய்வது தொடர்பாகக்கொண்டிருக்கும் திறன், அவரின் ஊக்கம், இலட்சியம் என்பவற்றினைக் கண்டறியும் நோக்கில் நடத்தப்படும் பரீட்சையாகும். பொதுவாக வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு அதனூடாக தகவல்கள் கேட்கப்பட்டு பரீட்சிக்கப்படும்.

உளவியல் பரீட்சை என்பது விண்ணப்பதாரர் எந்தளவுக்கு வேலை செய்வதில் ஆர்வத்தினைக் கொண்டுள்ளார். வேலையில் எதிர் நோக்கும் சவால்களை ஏற்றுக் கொள்ளத்தயாராகஉள்ளார் என்பனவற்றினைக் கண்டறிவதற்கு உளவியல் பரீட்சை பெரிதும் உதவுகின்றது.

### 1.4 நேர்முகப்பரீட்சை
### INTERVIEW

ஊழியர்களது திறமைகளை மதிப்பீடு செய்வதற்கான ஒரு நுட்பமே நேர்முகப்பரீட்சையாகும் இங்கு பரீட்சார்த்திகளதுதிறமைமட்டுமன்றி தோற்றத்தையும் மதிப்பீட்டுக் கொள்ள முடியும் வாய்மொழி மூலமாக நடைபெறும் இப்பரீட்சையில் ஊழியர்களது ஆளுமையை மதிப்பிட்டுக் கொள்ள முடிவதுடன் வேலைக்கு பொருத்தமானவரை இனம் காண முடியும்.

நேர்முகப்பரீட்சை தனி ஒருவரால், இருவரால் அல்லது ஒரு தொகுதியினரால் நடத்தப்படலாம். நேர்முகப்பரீட்சை சரியான முறையில் திட்டமிட்டு பொருத்தமான தகவல்களைப் பெறும் பொருட்டு சரியான கேள்விகளைக் கேட்டல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் கதைப்பதனை உற்சாகப்படுத்தும் பொருட்டு நேர்முகப்பரீட்சை அமைதல் வேண்டும்.

பரீட்சை, நேர்முகப்பரீட்சை என்பவற்றின் அடிப்படையில் பெற்ற பெறுபேறுகளைக்கொண்டு பொருத்தமானவர்கள் தெரிந்து அவர்களை மருத்துவபரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அறிக்கை திருப்திகரமாக இருப்பின் அவருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும். இதன் பொருட்டு நியமனக்கடிதம் வழங்கப்படும்.

### 1.5 பயிற்சி அளித்தல் :
### TRAINING

வேலைக்கு சேர்க்கப்பட்ட ஊழியர்களை சரியான முறையில் பணிகளை மேற்கொள்வதற்காக அவர்களுக்கு வழங்கப்படும் அனைத்து நுட்பங்களும் பயிற்சியளித்தல் எனப்படும். ஒரு நிறுவனத்தின் ஊழியர்களிடமிருந்து சரியான செயல்திறனை பெற்றுக் கொள்வதற்கு பயிற்சியளித்தல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

புதிதாக வேலைக்கு சேர்த்துக் கொண்டவர்கள் மட்டுமன்றி ஏற்கனவே கடமையை பொறுப்பேற்ற ஊழியர்க்கும் காலத்துக்கு காலம் பொருத்தமான பயிற்சியளித்தல் வேண்டும். அத்துடன் ஒரே மட்ட ஊழியர்களுக்கு மட்டுமன்றி உயர் மட்ட, நடுத்தரமட்ட, கீழ்மட்ட ஊழியர்களுக்கும் இது வழங்கப்படுவதாகும். இப்பயிற்சியளித்தல் கல்வி, பயிற்சி, அபிவிருத்தி என்பவற்றுடன் இணைந்து கொண்டதாகும் அதாவது பயிற்சியளித்தலானது மனிதவளத்தின் மீது செய்யப்படும் ஒரு முதலீடாகும். இந்த முதலீட்டின் பெறுபேறாக மனிதவளம் அபிவிருத்தி காணப்படும்.

கல்வி எனப்படுவது தகமையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நீண்டகால கற்கும் செயற்பாடாகும் இது பாடசாலைக் கல்வியிலிருந்து பட்டப்பின் படிப்புவரை உள்ளடக்கியது பயிற்சி எனப்படுவது ஒரு தொழில் அல்லது முயற்சியை மேற்கொள்ளத் தேவையான அறிவு திறன் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கற்றறியும் செயற்பாடாகும். அபிவிருத்தி எனப்படுவது ஒரு தொழில் அல்லது முயற்சியை மேற்கொள்ளத் தேவையான அறிவு, திறன், என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் கற்றறியும் செயற்பாடு ஆகும். அபிவிருத்திஎனப்படுவது நிகழ்கால தேவையைவிட எதிர்காலத் தேவையை அடிப்படையாகக் கொண்டு வேலையில் வளர்ச்சி அடைவதில் கவனத்தினைக் கொண்டது.

ஒரு நிறுவனம் பயனுறுதிவான பயிற்சியை வழங்க வேண்டுமாயின் பயிற்சி நெறியை வடிவமைக்கும் போது பின்வரும் ஐந்து விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

(12ம் பக்கம் பார்க்க)

# நெல்லில் அதிகவிளைச்சலைப் பெறும் வழிகள்

நிலத்தை அதிக ஆழத்தில் உழ வேண்டும். குறைந்தது 8-10 அங்குல ஆழத்திற்காவது உழுது பண்படுத்த வேண்டும். மூற் கலப்பையால் ஆரம்பத்தில் பண்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. முதலாவது உழவிலிருந்து விதைக்கும் வரை குறைந்தது 3 வார கால இடைவெளியாவது இருப்பது அவசியமாகும். எப்போதும் சிபாரிசு செய்யப்பட்ட புதிய நெல் வர்க்கங்களையே செய்கை பண்ண வேண்டும். குளங்களில் போதியளவான நீர் இருக்குமாயின் கூடிய வயதுடைய வர்க்கங்களை விதைக்க வேண்டும். ஓர் ஏக்கரிற்கு 2 - 3 புசல் விதை நெல் போதுமானதாகும். போதியளவான சேதனப் பசளைகளை இடல் வேண்டும் இதற்கு வயலில் கிடைக்கும் வைக்கோல் முழுவதையும் அவ்வயலிற்கே இடுவதோடு, 30 கிலோ எடை கொண்ட 40 கட்டு பசுந்தாட் பசளை 2 தொன் மாட்டெரு என்பனவற்றையும் இடுவது நல்லது. இதனைத் தவிர சிபாரிசு செய்யப்பட்ட இரசாயனப் பசளைகளையும் இடல் வேண்டும். இவ்வாறன பயிர்ச் செய்கையைப் பின்பற்றிய பெரும்பாலான விவசாயிகள் 150புசலிற்கு அதிகமான விளைச்சலைப் பெற்று வருகின்றனர். எனவே நீங்களும் இவற்றைப் பின்பற்றி அதிக விளைச்சலைப் பெறுங்கள்.

# நெல்லை எவ்வாறுமுளை கட்டலாம்

சிறு போகத்தில் நெற் செய்கையை ஆரம்பிக்கும் விவசாயிகளே, நெல்லை சரியாக முளைகட்டச் செய்வதன் மூலம் எல்லா விதைகளையும் சீராக முளைக்கச் செய்யலாம். அத்துடன் பின்னர் இடைவெளிகளை நிரப்ப வேண்டிய தேவையும் ஏற்படாது.

விதைநெல்லைமுளைக்கச் செய்ய முன்னர் பதர், களைவிதைகள் போன்றவற்றை நீக்கிச் சுத்தப்படுத்த வேண்டும். சுத்தப்படுத்திய நெல்லை சுத்தமான நீரில் 24மணித்தியாலம் ஊறவிட வேண்டும். தேங்கி நிற்கும் நீரில் ஊறவிட வேண்டாம். இதே போன்று அசுத்தமான நீரிலும் ஊறவிட வேண்டாம். நெல்லை சாக்கில் இட்டுக் கட்டியோ அல்லது பீப்பாயிலோ ஊற விடலாம். நெல்லை சாக்கிலிட்டுக் கட்டும் போது அதிகமாகப் போட்டு இறுக்கமகக் கட்டக்கூடாது. 24 மணித்தியாலங்கள் ஊறவிடப்பட்ட நெல்லை வெளியே எடுத்து சுத்தமான தரையில் வாழை இலையின் மேல் பரவி முளைக்கவிட வேண்டும். வாழை இலையின் மேல் 4 அங்குல உயரம் வரை விதைகளை பரவலாம். ஊறவைத்த நெல்லை சாக்குடன் வைத்து முளைக்கவிடுதல் ஒரு பிழையான செயலாகும். முளைப்பதற்காக பரவிய நெல்லை ஈரச் சாக்கால் மூடிவிட வேண்டும். அத்துடன் நெல் உலராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த நெல் முளைக்க 48 மணித்தியாலங்கள் போதுமானது.

வயலில் விதைப்பதற்கு முதல் நாள் எல்லா விதைகளும் முளைத்திருக்கின்றதா என அவதானியுங்கள். கூடியளவு முளைத்து வேர்கள் ஒன்றுபட்டு கட்டியாக இருந்தால் அவற்றை உடைத்து விடுங்கள் முளைப்பு குறைவாக இருந்தால் மீண்டும் நீருற்றி ஈரச்சாக்கால் மூடி விடவேண்டும். முளை கட்டப்பட்ட இந்த விதைகளை நேரடியாக பண்படுத்தப்பட்ட வயல்களில் விதைகளைவிதைக்கலாம்.

# பெரிய வெங்காய விதைகளை வாங்கும்போது கவனிக்கப்பட வேண்டியவை

எந்தவொரு பயிர்ச் செய்கையிலும் விதைகள் அத்தியாவசியமானவை ஆகும். பெரிய வெங்காயமும் இதற்கு விதி விலக்கானதல்ல, எனவே தரமான, எமது சூழலிற்கு உகந்த விதைகளை நடும்போது நல்ல விளைவைப் பெறலாம். பெரிய வெங்காயம் நீண்ட ஒளிக்காலத்தை விரும்பும் ஒரு பயிராகும். எனவே ஜூன் நடுப்பகுதியில் எமது பயிர் ஒரு மாத வயதுடையதாக இருக்க வேண்டும். இதற்கு ஏப்ரல் இறுதிப் பகுதியிலேனும் நாற்று மேடையை அமைத்தல் வேண்டும்.

நாற்று மேடைக்கென விதைகளை வாங்கும் போது பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்வது அவசியமாகும். தற்போது நாசிக்ரெட், ராம்பூர் ஆகிய வர்க்கங்களின் விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில் ராம்பூர் வர்க்கத்தின் வெங்காயக் குமிழ்களை நீண்ட காலம் சேமித்து வைக்கலாம். ஆனால் விரைவாக அறுவடை செய்து மரக்கறியாக விற்பனை செய்ய விரும்பினால் நாசிக்ரெட் வர்க்கம் உகந்தவை.

நீங்கள் வாங்கும் விதைகள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட, விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையினரின் அறிக்கையை பரிட்சித்து விதைகளின் உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியும். எப்போதும் செல்லுபடியாகும் பற்றுச் சீட்டொன்றை வியாபாரியிடம் பெற்றுக் கொள்ளவும். விதைகளின் முளைத் திறன் லேபளில் குறிப்பிட்ட அளவைவிடக் குறைவாக இருப்பின் அது பற்றி வியாபாரியிடம் முறைப்பாடு செய்ய வேண்டும். இது தொடர்பாக மேலும் விபரங்களை அறிந்து கொள்வதற்கு வசதியாக இறக்குமதி செய்தோரின் பெயர், விபரம் போன்றவற்றுடன் பணிப்பாளர், விதை அத்தாட்சிப்படுத்தற் சேவை, த, பெ. இல, 1, சரசவி மாவத்தை, பேராதனை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Registered as a News paper at the G. P. O
SriLanka Under / No K. V. J. 59 / 87


## கூட்டுறவும் சன சமூக

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி அடைவதற்கான எண்ணத்தை மையமாகக் கொண்டே அபிவிருத்தி தோன்றியது. மனிதனுள் இயல்பாகவே தங்களுடைய வாழ்க்கை வெற்றிக்கான சக்தி உள்ளடங்கியுள்ளது. இதனை வெளிப்படுத்துவதே சனசமூக அபிவிருத்தியின் இலக்காகும். குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் பொருளாதார, சமூக, கலாச்சார ஒழுக்க பண்புகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதனையே சனசமூக அபிவிருத்தியில் எதிர்பார்க்கப்படுகின்றது.

மக்களின் பங்குபற்றலுடன் மக்களின் உள்ளாற்றலைப் பயன்படுத்தி மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைஏற்படுத்துவதை நோக்கமாக கொண்ட செயற்பாடே சனசமூக அபிவிருத்தியாகும், சனசமூகம் இயல்பாகவே பல்வேறுபாடுகள், குறைபாடுகளைக் கொண்ட சிக்கலான அமைப்பாகும். இத்தகைய சனசமூகத்தில் நல்ல தெளிவான வழிகாட்டலும், ஊக்கப்படுத்தலின் கீழ் தங்களின் குறைபாடுகளை களைந்து கொண்டு முன்னேறுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது. இத்தகைய முன்னேற்றத்துக்கான சனசமூகத்தை வழிநடத்த வேண்டிய தேவை உள்ளது. இத்தகைய நிலையில் கூட்டுறவாளர்கள் தமது நடைமுறை செயற்பாடுகளை ஒப்புநோக்குவதன் மூலம் சில உண்மைகளை உணரக்கூடியதாக இருக்கும்.

கூட்டுறவு அமைப்பில் முறையான அமைப்புக்கள் பல உள்ளன. இளைக் குழு, பொதுச்சபை, இயக்குனர்சபை பணியாளர் அமைப்புக்கள் என்பன காணப்படுகின்றன, இவ்வமைப்புக்கள் தொழில் ரீதியான உதவினை மேம்படுத்தி எந்தளவிற்கு செயற்படுகின்றன? செயற்படுவதற்கான தொடர் நடவடிக்கைகள் இயக்குனர்சபையால் எந்தளவுக்கு மேற்கொள்ளப்படுகின்றன.

இதனை விருத்தி செய்வதற்கான இயக்குனர் சபையின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தன? கட்டடங்கள், அமைப்புக்கள், கூட்டுறவாளர்களை உருவாக்குதல் போன்றவற்றில் அவர்கள் ஏற்படுத்திய சாதனைகள் என்பவற்றை தற்போதைய கூட்டுறவாளர்கள் எந்தளவுக்கு உணர்ந்துள்ளனர், உணரக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை சிந்திக்க வைப்பதிலேயே கூட்டுறவின் வளர்ச்சியின் முக்கியத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். பொருளாதார இலாபத்தை நோக்கமாகக் கொண்டு இருக்கும் நிறுவனத்தை வழிநடத்துவது தான் கூட்டுறவு என்ற சிந்தனை இருக்குமானால் அது பகட்டானது. கூட்டுறவாளர்களின் முன்னேற்றத்துக்காக எதனை சாதித்துள்ளோம் என்பதை வெளிப்படுத்தக் கூடியதாக கூட்டுறவின் செயற்பாடுகள் அமைதல் வேண்டும். அதன் மூலம் சனசமூக அபிவிருத்தியில் கூட்டுறவும் இணைந்து வழிகாட்டக் கூடிய அமைப்பாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

கூட்டுறவின் மூலம் சனசமூக அபிவிருத்தியை ஏற்படுத்தும் போது கவனிக்க வேண்டியவை.

1. சனசமூகத்திற்கு தேவையானவற்றை வழங்குவதைவிட சன சமூகத்தில் உள்ள ஆற்றல்களை முன்னேற்றுவதற்கான செயற்பாடுகள் முக்கியமானதாகும்.
2. எல்லா நபர்களும் முக்கியமானவர்கள் அபிவிருத்தி அல்லது முன்னேற்றத்துக்கு எல்லோரிடமும் அபிலாசைகள், கருத்துகள் உள்ளன.
3. சிறிய முன்னேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு ஆத்ம திருப்தியும், சுய நம்பிக்கையையும் பயன்படுத்தி மிகவும் சிக்கலான அபிவிருத்தி பிரச்சினைகளை தீர்ப்பதற்காக சனசமூகத்தை பயன்படுத்தி கொள்ளலாம்.
4. சுய ஆற்றல் குறித்து நம்பிக்கை வைப்பது, பிரதேச வளங்களையும், மனித உழைப்பையும் பயன்படுத்துவது எல்லா சந்தர்ப்பங்களிலும் முக்கியமானதாகும்.

கூட்டுறவாளர்கள் எழுத்தாளர்களிடமிருந்து கதை, கட்டுரை, கவிதை பொது அறிவு விடயங்களை எதிர் பார்க்கின்றோம், எழுதும் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் சுருக்கமாக எழுதி,

ஆசிரியர் ஐக்கியதீபம்
யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
வீரசிங்கம் மண்டபம் 2ம் மாடி,
இல 12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## முகாமைத்துவத்தில்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அ) பயிற்சியின் நோக்கம்(Aim)
ஆ) பயிற்சியில் உள்ளடக்கப்பட வேண்டியவை (Content)
இ) பயிற்சி முறை (Method)
ஈ) பயிற்சி மதிப்பீடு ( Evalua - tion )

நிறுவனங்களின் பெறுமதிமிக்க சொத்து மனிதவளமாகும். திறன்மிக்க ஊழியர்களைக் கொண்டுள்ள நிறுவனங்களே நோக்கத்தினை அடைந்து கொள்ள முடியும். வாடிக்கையாளருக்கு தரமான பொருள் சேவைகளை வழங்க முடியும் அத்துடன் இலாபத்தினைத் உழைத்து தொடர்ந்து சந்தையில் நிலைத்து நிற்க முடியும்.

எனவே நிறுவனம் சரியான ஆட்சேர்ப்பு தெரிவு மூலம் வேலைக்கு மிகவும் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து, பொருத்தமான பயிற்சியினை வழங்குவது மிகவும் அவசியமானது.

## தமிழீழத் தேசிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னால் 25 லட்சத்துக்கு மேற்பட்ட பயன்தரும் பனை மரங்களும், 9 லட்சம் தென்னை மரங்களும் தறிக்கப்பட்டு இராணுவ காப்பரண்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது இவற்றை விட குண்டுத்தாக்குதல்கள் காரணமாக பெருந்தொகையான மரங்கள் முறிந்தும் பாவனைக்குதவாத நிலையிலும், காணப்படுகின்றன.

தேவையற்ற முறையிலும், பாவனைக்குதவாத நிலையிலும் இப்பனை மரங்கள் அழிக்கப்படுவதினால் பனை வளத்தின் மூலம் அன்றாடம் வாழ்க்கையை நடத்தி வரும் குறிப்பிட்ட ஒரு தொகை மக்களின் வாழ்க்கை சின்னாபின்னப்படுவதுடன் பொருளாதார வளமும் அழிக்கப்படுகிறது.

இந்நிலையைத் தடுத்து நிறுத்த கூட்டுறவாளர்களாகிய நாம் யூலை மாதம் 28-ம் திகதி நடைபெறவுள்ள குடாநாடு தழுவிய ஆர்ப்பாட்டக்கண்டனப் பேரணிக்கு ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம மண்டபத்தின் 2ம் மாடியில் இயங்கும் யாழ். மா. கூ. சபையினரால் 2002ம் ஆண்டு வைகாசி மாதம் வெளியிடப்பட்டது.